KEMENTERIAN KOMUNIKASI

# மடானி அரசாங்கம் - இந்திய சமுதாயம்
# இணைப்புப் பாலம் நண்பா



கோலாலம்பூர், ஜூன் 24-

தொடர்பு வலையை விரிவுபடுத்தி இந்திய சமுதாயத்துடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான மடானி அரசாங்கம் தொடர்புத்துறை அமைச்சின் வழி நண்பா எனும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

தொடர்புத்துறை அமைச்சு கீழ் செயல்படும் ஜே-கொம் எனப்படும் சமூகத் தொடர்பு இலாகா இத்திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. நண்பா எனும் தமிழ்ச் சொல்லாடலில் நட்பை மையப்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் திட்டத்தின் மூலம் இந்திய சமூகம், மடானி அரசாங்கம் இடையிலான உறவை வலுப்படுத்தி அதன் மூலம் சிறந்ததொரு ஒத்துழைப்பையும் இணக்கத்தையும் உருவாக்குவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

புரோகிராம் நாடி அஸ்பிராசி நேஷனல் பெர்சாமா அனாக் மூடா அதாவது தேசிய இளைய சமுதாயத்தின் விருப்ப நாடித்துடிப்பு எனும் இத்திட்டம் பல்வேறு செயல் திட்டங்களைக் கொண்டிருக்கிறது. சுய வளர்ச்சி, மெய்யியல் திறன்கள், அரசாங்கத்தின் வாய்ப்புகள், திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு இந்திய இளைஞர்களை முன்னேற்றப் பாதையில் பயணிக்க வைப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அரசாங்கம் வழங்கும் புதிய வாய்ப்புகள், கொள்கைகள், முயற்சிகள், திட்டங்கள் குறித்த தகவல்களை இந்திய இளைஞர்கள் மத்தியில் விரிவாகப் பகிர்தல், இந்திய இளைஞர்களிடையே இணையதள அச்சுறுத்தல்கள், பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதில் அடங்கும்.

வரும் 2025 ஜூன் 28ஆம் தேதி காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இந்த நிகழ்ச்சி லெம்பா பந்தாய், ஐடபிள்யு கே இக்கோ பார்க், மெர்பாவ் மண்டபத்தில் நடைபெறும். தொடர்புத்துறை அமைச்சர் டத்தோ ஃபாமி ஃபட்ஸில் காலை 9.00 மணிக்கு நண்பாவை அறிமுகம் செய்து வைப்பார். இந்த நிகழ்ச்சியில் இந்திய சமுதாயத்தின் பல்வேறு தரப்புகள், அரசு, அரசு சாரா அமைப்புகள், தனியார் துறையினர், இளைஞர் அமைப்புகள் ஆகியவை பங்கேற்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கு மேல் சிறப்பு சேர்ப்பதற்கு புதையல் வேட்டை, விளக்கக் கூட்டங்கள், அரசாங்கம், தனியார் நிறுவன முகப்பிடச் சேவைகள் - கண்காட்சி, வண்ணம் தீட்டும் போட்டி, மெக்டோனால்ஸுடன் சிறார் மனமகிழ் நிகழ்ச்சி, ரஹ்மா மடானி விற்பனை, அதிஷ்டக் குலுக்கல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இந்திய சமுதாயத்திற்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு மிக விரிவான வாய்ப்புகளைத் தரக்கூடிய திட்டங்கள் பற்றிய தகவல்களை அளிப்பதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் நண்பா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் இந்திய சமுதாயத்திற்கும் இந்திய இளைஞர்களுக்கும் மிகவும் பொருத்தமான, அவசியமான நிகழ்ச்சியாக நண்பா திகழ்கிறது.

இந்நிகழ்ச்சியின் வழி மகிழ்ச்சி அடையும் அதேநேரத்தில் அரசாங்கத் திட்டங்கள், கொள்கைகள், முயற்சிகள் குறித்த தகவல்களை விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்வதற்கான ஒரு தளமாகவும் அமைகிறது. இந்நிகழ்ச்சியின் வழி கல்வி, திவெட் போன்ற தொழில்திறன் பயிற்சி, உடல் ஆரோக்கியம், பாதுகாப்பு, இணைய பாதுகாப்பு, மலேசிய மடானி அரசாங்கம் குறித்த தகவல்களை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதோடு மடானி அரசாங்கத்தையும் இந்திய மக்களையும் இணைக்கும் ஒரு தகவல் பாலமாக நண்பா செயல்படும். எனவே இந்த அற்புதமான நிகழ்ச்சி யில் திரளாக வந்து கலந்து கொண்டு விரிவான தகவல்க ளைத் தெரிந்து கொள்வதோடு ஒரு சரியான தெளிவையும் பெற வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாக உள்ள நிலையில் இந்த அரிய வாய்ப்பை நழுவ விட வேண்டாம் என்று தொடர்புத்துறை அமைச்சு, அதன் கீழ் செயல்படும் ஜே-கொம் அழைப்பு விடுத்தன.


KEMENTERIAN PERALIHAN TENAGA DAN TRANSFORMASI AIR

Suruhanjaya Tenaga
Energy Commission

## SKIM TIME-OF-USE (TOU) DIPERLUASKAN KEPADA SEMUA MULAI 1 JULAI 2025

**Pelanggan Domestik dan Bukan Domestik Voltan Rendah dengan pepasangan meter pintar kini boleh melanggani skim ini**

ToU adalah satu skim yang memperkasakan pengguna untuk mengawal bil dan penggunaan elektrik bagi menikmati kadar lebih rendah semasa waktu luar puncak.

Pelanggan dinasihatkan untuk meneliti corak penggunaan bulanan sebelum memilih skim ToU.

### SKIM TOU BAHARU

| Waktu luar puncak | Waktu puncak |
|---|---|
| **10:00 malam - 2:00 petang** (Isnin - Jumaat) **Sepanjang hari** (Sabtu - Ahad) | **2:00 petang - 10:00 malam** (Isnin - Jumaat) |
| **Kadar tarif lebih rendah** | **Kadar tarif lebih tinggi** |

Nota: Pelanggan ToU sedia ada akan dipindahkan ke skim ToU baharu secara automatik dan boleh menikmati tempoh waktu luar puncak yang lebih panjang.

### MANFAAT TOU

**Mengurangkan Bil Elektrik Bulanan**
Pelanggan boleh menikmati kadar lebih rendah apabila menggunakan elektrik ketika waktu luar puncak.

Untuk maklumat lanjut, layari **www.mytnb.com.my/tariff**

Tertakluk kepada Semenanjung Malaysia sahaja.